THE HON. THIRU S. J. SADIQ PASHA : Detailed preliminary proposals for strengthening and widening to two lanes standard of National Highways No. 7 and No. 47 at a cost of Rs. 570 lakhs and Rs. 590 lakhs respectively have been sent to the Government of India.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, வேலூருக்கு அருகில் சென்னையிலிருந்து பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை விஸ்தரிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறதா? தற்போது அந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசலாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறதே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சென்னை–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையைப்பற்றி செயற்குறிப்பு இல்லை.

Bridge across Cauvery in Tiruchirappalli

*523 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to ease the traffic problem on the Tiruchirappalli bridge on the Cauvery?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருச்சிராப்பள்ளி நகரத்தில் காவிரியாற்றுப் பாலத்தின் மீது வண்டிப் போக்குவரத்துச் சிக்கலை எளிதாக்கக் கீழ்க்காணும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன :—

(அ) வண்டிப் போக்குவரத்தை முறைப்படுத்த காவிரிப் பாலத்தின் இரு முனையிலும் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

(இ) பாலத்தின் மீது வண்டிகள் ஒருவழி மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

(உ) காவிரிப்பாலத்தின் இருமருங்கிலும், போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு ஸ்ரீரங்கத்திலுள்ள லயன்ஸ் கிளப் தானியங்கும் போக்குவரத்து அடையாளக்குறிகளை நிறுவ முன் வந்தது. அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அரசு சென்னை (நெடுஞ்சாலைகள்-கிராமப்பணிகள்) தலைமைப் பொறியாளருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே காவேரி பாலமானது தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலிருந்து தெற்குக் கோடி வரையில் செல்லுகின்ற ரஸ்தாவில் உள்ளது. இந்தப் பாலத்தை அகலப்படுத்தினால் அல்லது அதன் பக்கத்தில் மற்றொரு பாலத்தைக் கட்டினால் இப்பொழுதுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியும். இதன் காரணமாக வியாபாரம் அதிகமாக நடைபெறும், விவசாயிகளுக்கு அதிக பயனைத் தரும் என்பதை மனதில் கொண்டு, பாலத்தை அகலப்படுத்தும் முயற்சியில் அல்லது வேறொரு பாலத்தைக் கட்டும் முயற்சியில் இறங்க இந்த அரசாங்கம் முன்வருமா?

1970 மார்ச் 24]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, லாரி, பஸ் போன்ற பாரம் உள்ள வண்டிகள் பழைய பாலத்தின்மீது போகக் கூடாது என்றும் புதிய பாலத்தின் மேல் செல்வதற்கு உத்தரவிட்டு தற்போதுள்ள நெருக்கடியை குறைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்ருகத் தெரியும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலங்களுக்கு எவ்வளவு வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? கட்டி முடிந்தவுடனேயே பயனற்றதாகப் போய்விடுவதாகச் சொல்கிருர்களே, அதே அடிப்படையில்தான் காவேரிப் பாலத்தைப் பற்றியும் சொல்கிருர்களா ? அதைப்பற்றிப் பரிசீலிக்க அரசாங்கம் முன்வருமா ? அதன்மீது அரசாங்கம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது இந்தக் கேள்வியிலே வராதே.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

Rates for tourist taxis.

* 524 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the rates for the tourist taxis have been revised by the Government; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) சீருலா வாடகை மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கும் பேணுவதற்கும் ஏற்படும் அதிகச் செலவு காரணமாக, அவற்றின் கட்டண வீதங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று சீருலா வாடகை மோட்டார் வண்டி உரிமையாளர்கள் முறையிட்டு கொண்டனர். சீருலாப் பயணிகளின் நலனை முன்னிட்டு நாடு முழுவதும் இந்த வீதங்கள் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதிப் படுத்தும் நோக்கத்துடன், சீருலா வாடகை மோட்டார் வண்டிகளின் கட்டண வீதங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்திய அரசும் கருத்து தெரிவித்தது. எனவே, இந்த அரசு போக்குவரத்து ஆணையாளருடன் கலந்தாலோசித்து, கட்டண வீதங்களை மாற்றி அமைப்பதற்கான ஆணையை மாநிலப் போக்குவரத்து அதிகாரிக்குப் பிறப்பித்துள்ளது.